D.No. 653/2026
Date. 27/04/2026

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

## மாவட்ட நீதிமன்ற வளாகம், செங்கல்பட்டு- 603 001

**காணாமல் போன குழந்தைகள் மீட்டெடுப்பது தொடர்பாக காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வதொண்டர்கள் சேர்க்கை அறிவிப்பு**

## NOTIFICATION NO: 03/2026, DATED: 27.04.2026

**(Selection of Para Legal Volunteers in Police Stations for missing children and other offences against children)**

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Bachpan Bachao Andolan VS Union of Indiaand Others, என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படியும், தமிழ்நாடு அரசின் G.O.(MS)No, 130 Dated 12.03.2026 உத்தரவுபடியும் மற்றும் தலைவர்/முதன்மை நீதிபதி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் ஆணைப்படியின் வழிகாட்டுதளின் படியும், செங்கல்பட்டு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் இயங்கிவரும் தாம்பரம், ஆலந்தூர், பல்லாவரம், திருக்கழகுன்றம், திருப்போரூர், மதுரந்தகம் மற்றும் செய்யூர் ஆகிய வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு, குழந்தை தொழிலாளர் முறை மற்றும் கடத்தலுக்கு எதிரான குற்றங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் காணாமல் போன குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மறு வாழ்வு அளித்து கல்வி கற்பிப்பதன் மூலம் குழந்தை நட்பு சமுதாயத்தை உறுவாக்க (30-40) சட்டம் சார்ந்த தன்னார்வதொண்டர்கள் (Para Legal Volunteers) தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். மேற்படி இப்பணி சட்டதன்னார்வர்களுக்கான கடமை மற்றும் சேவை மட்டுமே. இது நிரந்தரபணிக்கானது அல்ல, முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த சட்டம் சார்ந்த தன்னார்வலர்களிடமிருந்து கீழ்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

PLV-ஆகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு (Plus Two) ஆகும். வயது வரம்பு 25 முதல் 65 வயது வரை ஆகும். பட்டதாரிகளுக்கும், சமூக்பபணி, உளவியல் அல்லது அது சார்ந்த பிறதுறைகளின் தகுதி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

1. சமூக சேவை செய்யும் சமூக ஆர்வலர்கள்
2. ஆசிரியரிகள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட
3. அங்கன்வாடி பணியாளர்கள்
4. உளவியலாளர் (மனோதத்துவ நிபுணர்)
5. MSW பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்
6. ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் (சட்ட மாணவர்கள்)
7. திருநங்கைகள்

அரசியல் கட்சியுன் தொடர்புடையர்கள் விண்ணப்பிக்க முடியாது.

சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓராண்டு காலத்திற்குப் பட்டியலிடப்படுவார்கள்: அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில், DLSA-வின் தலைவரின் பரிந்துரையின் பேரில் இக்காலம்மேலும் நீட்டிக்கப்படலாம்.

சட்டத் தன்னார்வலர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக, பின்வருவன அவர்களின் கடமைகளாகவும் பொறுப்புகளாகவும் அமையும்:

- விசாரணையின் போது உதவுதல்
- மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களைப் பெறுதல்
- காவல் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மீட்கப்பட்ட குழந்தைக்குப் பிந்தையகால ஆர்வு அளித்தல்
- நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை எளிதாக்குதல்.

**பணி:** காணாமல் போன குழந்தை தொடர்பான வழக்குஅல்லது குழந்தைகளுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்கு ஏதேனும் பதிவாகும் போதெல்லாம், காவல் நிலைய ஆய்வாளர்; (SHO) அல்லது காவல் நிலைய எழுத்தர், DLSA-TLSC-க்குத் தகவல் தெரிவித்து, ஒரு சட்டம் சார்ந்த தன்னார்வதொண்டரை (PLV) காவல்நிலையத்திற்கு அனுப்பி, புகார் தாரருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கோ உதவ ஏற்பாடு செய்ய வேண்டும்.

காணாமல் போன குழந்தைகள் தொடர்பான வழக்குகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பிற குற்றங்கள் தொடர்பான விவரங்களை, காவல் நிலைய ஆய்வாளர் (SHO), சூழலுக்கு ஏற்ப DLSA-க்கோ அல்லது TLSC-க்கோ உடனடியாக வழங்க வேண்டும்.

சட்டத் தன்னார்வலர்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தின் செயலாளரிடம் மாதந்தோறும் அறிக்கைகள், தன்னார்வலர்களின் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கைகள், தன்னார்வலர்களின் செயல்பாடு மற்றும் அவர்களின் பணிக்கால நீட்டிப்பை மதிப்பிடுவதற்காக, மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் தலைவரால் ஆய்வு செய்யப்படும்.

சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளரால் (SHO) வழங்கப்படும் வருகைச் சான்றிதழ் மற்றும் சட்டத் தன்னார்வலர்களால் சமர்பிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையில், மாவட்டசட்டப் பணிகள் ஆணையத்தால் அவர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படும்.

சட்டதன்னார்வலர் ஒருவருக்கு,

ஒவ்வொரு வருகைக்கும் ரூ.1,000/- வீதம் மதிப்பூதியம் பெற உரிமை உண்டு: எனினும், ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூ.5,000/-என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டே இத்தொகை வழங்கப்படும்.

மேற்கண்ட பிரிவினர்கள் சட்டதன்னார்வ தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை https:chengalpattu.dcourt.gov.in/ என்ற செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த உரிய ஆவணங்களுடன 22.05.2026- ம் தேதி மாலை 5.30 மணிக்குள் பதிவு தபால் முலமாகவோ (அ) நேரிலோ விண்ணப்பிக்கம் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தேர்வு:** நேர்காணல் மூலம் தகுதியான நபர்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள், தேர்வு செய்யப்படாதவர்களின் விபரம் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யபடுபவர்களின் விவரமும் https:chengalpattu.dcourt.gov.in/ என்ற செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

**குறிப்பு:** மேற்படிபணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும். நிரந்தபணியென கருத இயலாது. மேலும் விபரங்களுக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (அ) வட்ட சட்டப்பணிகள் குழுக்களை அணுகலாம்.

27/4/26.

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
செங்கல்பட்டு.

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, செங்கல்பட்டு

## சட்ட தன்னார்வ தொண்டராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்

1 மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது.

2 மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும் நிரந்தரபணியென கருத இயலாது.

3 மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணப்பங்களை செங்கல்பட்டு நீதிமன்ற https://chengalpattu.dcourts.gov.in/ என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்திசெய்து உரிய ஆவணங்களுடன் 22.05.2026-ம் தேதி மாலை 05.30 மணிக்குள் பதிவு தபார் மூலமாக (அ) நேரிலோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி தலைவர் முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட நீதிமன்ற வளாகம், செங்கல்பட்டு.

5 விண்ணப்பங்கள் வந்து வேண்டிய கடைசிதேதி 22.05.2026 மாலை 05.30 மணி அதற்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6 கீழ்க் குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | பிறந்த தேதி மற்றும் வயதுக்கான சான்று | பிறப்பு சான்றிதழ் S.S.L.C/H.S.C சான்றிதழ் |
| 2. | ஜாதிசான்று | தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்பட ஜாதி சான்று |
| 3. | கல்வி தகுதி | H.S.C/Degree/Diplima சான்றிதழ்கள் |
| 4. | இதர கல்வித் தகுதி | ஏதேனும் இருப்பின் |
| 5. | நிரந்தர முகவரிக்கான சான்று | குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, பாஸ்போர்ட் |
| 6. | அனுபவ சான்றிதழ்கள் | ஏதேனும் இருப்பின் |

மேலும் விவரங்களுக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் (அ) வட்ட சட்டப்பணிகள் குழுக்களை அணுகலாம் (அ) https://chengalpattu.dcourts.gov.in/ என்ற செங்கல்பட்டு நீதிமன்ற இணையதளத்தையும் பின்பற்றலாம்.

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, செங்கல்பட்டு

சட்ட தன்னார்வ தொண்டர்களாக பணிபுரிவதற்கான விண்ணப்பபடிவம்

புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | |
| 2. | தந்தை/கணவர் பெயர் | |
| 3. | பாலினம் | ஆண்/பெண்/மூன்றாம் பாலினத்தவர் |
| 4. | பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழை இணைக்கவும்) | |
| 5. | கல்வித் தகுதி (சான்றிதழை இணைக்கவும்) | |
| 6. | சாதி (சான்றிதழை இணைக்கவும்), இனம், மதம் மற்றும் தாய்மொழி | |
| 7. | நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | |
| 8. | இதற்கு முன் தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | |
| 9. | திருமணநிலை | |
| 10. | காவல் துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால் ?அதன் விவரம் | |
| 11. | தாங்கள் எந்தப் பகுதியில் சட்டதன்னார்வலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (டிக் செய்யவும்) | |

கீழகண்ட எந்த பிரிவின் கீழ் விண்ணப்பிக்கிறீர்கள் ( அதற்கான சான்றிதழை இணைக்கவும்)

| வ.எண் | பிரிவுகள் | விண்ணப்பிக்கும் பிரிவு |
|---|---|---|
| 1. | ஆசிரியர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட) | |
| 2. | ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் | |
| 3. | ஊளவியலாளர் (மனோதத்துவ நிபுணர்) | |
| 4. | MSW Students & Teacher –பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் | |
| 5. | அங்கன்வாடி பணியாளர்கள் | |
| 6. | மருத்துவர்கள் சார்பற்ற அரசு சாரா சமூகசேவை நிறுவனங்கள் மற்றும் சட்ட மாணவர்கள் | |
| 7. | ஆரசியல் சார்பற்ற அரசுசாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்க பிரமுகர்கள் | |
| 8. | திருநங்கைகள் | |

மேற்கூறிய அனைத்து தகவல்களும் உண்மை என சான்றளிக்கிறேன். உரிய சான்றிதழ்களின் நகலை இணைத்துள்ளேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்:

இடம்: